**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை :- திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2026-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31-ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

**IA No.2/2025 in MCOP 314/2022**

கிளை மேலாளர்,
தி நியூ இந்தியா அன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
கரூர் . . . மனுதாரர்கள் /
இரண்டாவது எதிர்மனுதாரர்

**/எதிர்/**

1. நாகராஜ்
2. காருண்ய வச்சிரா . . . எதிர்மனுதாரர்கள்/
மனுதாரர்கள்

3. ரெங்கநாதன் . . . எதிர்மனுதாரர் /
முதல் எதிர்மனுதாரர்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில், கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.-ன், ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சியத்தை மீண்டும் அழைக்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 20.11.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 22.07.2026 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 31.07.2026 |
| மனுதாரருக்காக | : | திரு.A.மணிவேல் - வழக்கறிஞர் |
| ஒன்று, இரண்டு எதிர்மனுதாரர்களுக்காக | : | திரு.A.பாண்டியன் - வழக்கறிஞர் |
| மூன்றாவது எதிர்மனுதாரர் | : | தோன்றா தரப்பினர் |

**1) மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர் பிரதான மனுவில் இரண்டாவது எதிர்மனுதாரர். பிரதான மனுவில் இறந்துபோன ஜான் டேவிட் ராஜா என்பவர் வேலை செய்ததாக கூறப்படும் கோயம்புத்தூரில் உள்ள BPO Interfra India Private Limited–ன் நிர்வாக அதிகாரி தாக்கல் செய்த சம்பள பட்டியலில் E.S.I பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் ஜான் டேவிட் ராஜாவின் இறப்பிற்கு இழப்பீடு பெறப்பட்டுள்ளது குறித்து மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளிடம் விசாரணை செய்ய வேண்டியுள்ளதால், ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சியத்தை மீண்டும் அழைக்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) ஒன்று, இரண்டு எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் எந்த அளவும் முகாந்திரம் இல்லை. மேற்படி இழப்பீட்டுத் தொகை ஏதும் பெற்றிருந்தால், மேற்படி தொகையை இந்த வழக்கின் இழப்பீட்டுத் தொகையில் பிடித்தம் செய்து கொள்வதற்கு எந்தவிதமான சட்டப்படியான முகாந்திரமும் கிடையாது என்பதற்கு ஆதரவாக முன்தீர்ப்புகள் உள்ளது. பிரதான மனுவை மறுதிறவு செய்யக் கோரும் மனுவிற்கு எந்தவித வழக்கு மூலமும் இல்லை என்பதால், மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்கள்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம்

செய்துள்ளதால், மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர்கள் அவர்களது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால், மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

6) **தீர்வு :–**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர் பிரதான மனுவில் இரண்டாவது எதிர்மனுதாரர். பிரதான மனுவில் இறந்துபோன ஜான் டேவிட் ராஜா என்பவர் வேலை செய்ததாக கூறப்படும் கோயம்புத்தூரில் உள்ள BPO Interfra India Private Limited–ன் நிர்வாக அதிகாரி தாக்கல் செய்த சம்பள பட்டியலில் E.S.I பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் ஜான் டேவிட் ராஜாவின் இறப்பிற்கு இழப்பீடு பெறப்பட்டுள்ளது குறித்து மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளிடம் விசாரணை செய்ய வேண்டியுள்ளதால், ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சியத்தை மீண்டும் அழைக்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், நம்பத்தகுந்தவையாகவும் உள்ளது. மனுதாரர் / இரண்டாவது எதிர்மனுதாரருக்கு அவருடைய கட்சியை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும். இம்மனுவினை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும், சிரமமும் ஏற்படபோவதில்லை. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

7) **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம்

செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 31–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.07.31 15:33:21 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.07.31 15:33:26 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.